செ.வெ.எண்: 01/ஜனவரி நாள்: 02.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக நடத்தப்பட்ட மாநில அளவிலான சிறப்பு பயிற்சி முகாமில் கலந்து கொண்ட வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்டம், சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கில் இன்று (02.01.2016) மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், SDAT எறிதல் அகாடமி சார்பாக விளையாட்டு வீரர்களுக்காக நடைபெற்ற மாநில அளவிலான 6 நாள் சிறப்பு பயிற்சி முகாமின் நிறைவு விழாவில் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவ, மாணவியர்களின் கல்வி வளர்ச்சியே நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்ற நோக்கத்தில் கல்வித்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாணவ, மாணவியர்களின் கல்விக்காக மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் அவர்கள் ஆர்வத்தினை ஊக்குவித்து தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்திடும் ஏதுவாக விளையாட்டுத் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்திற்கு பெருமை சேர்த்திடும் வகையில் உலக செஸ் சாம்பியன் போட்டியினை தமிழகத்தில் நடத்தி சிறப்பித்துள்ளார்கள். மேலும் 125 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர சர்வதேச, தேசிய, மாநில அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் பொறியியல் பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டு வருகிறது. விளையாட்டு வீரர்களுக்கு அவ்வப்போது மாநில மற்றும் மண்டல அளவிலான பல்வேறு பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், SDAT எறிதல் அகாடமி சார்பாக விளையாட்டு வீரர்களுக்காக நடைபெற்ற மாநில அளவிலான 6 நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சர்வதேச, தேசிய, மாநில அளவில் நடைபெற்ற எறிதல் போட்டிகளில் (Throw events) பதக்கங்களை வென்ற 83 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இவ்வீரர்களுக்கு தலைசிறந்த நிபுணர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் மூலம் ஈட்டி எறிதல், குண்டு எறிதல், வட்டு எறிதல், சங்கிலி குண்டு எறிதல் உள்ளிட்ட எறிதல் போட்டிகள் குறித்த நுணுக்கங்கள் பயிற்சியாக வழங்கப்பட்டது. இம்முகாமில் பங்கேற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இம்முகாமில் பெற்ற பயிற்சியினை முழுமையாகப் பயன்படுத்தி சர்வதேச விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மண்டல முதுநிலை மேலாளர்கள்(மதுரை) திரு.தமிழ்செல்வன், (திருவண்ணாமலை) திரு.கலைச்செல்வன், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சேவியர் சர்க்குணம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஜெயஜோதி, பயிற்சியாளர்கள் திரு.வேல்முருகன், திருமதி.கோகிலா, திரு.பெருமாள் இராமசாமி, திருமதி.கலைச்செல்வி, அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**